# TNPSC GROUP I / II PRELIMINARY
# WEEK TEST 2 OF APRIL, 2023

1. Fill in blanks
   To anchorites, to indigent, to those who've passed away,
   ____________ virtue famed is needful held and stay
   a. The man for household b. The man for kingdom
   c. God from heaven d. The man of virtue
   கோடிட்ட இடத்தை நிரப்புக
   துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
   ____________ என்பான் துணை
   a. இல்வாழ்வான் b. அரசன் c. இறைவன்
   d. நல்லொழுக்கமுடையவன் d. விடை தெரியவில்லை

2. A good character and ethical life is to have a mind free from _____
   a. anger b. enmity c. cruelty
   d. fault e. Answer not known
   உள்ளத்தில் ______ இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும்
   a. சினம் b. பகை c. கொடுமை
   d. குற்றம் e. விடை தெரியவில்லை

3. Which is the best among all virtues?
   a. spotless mind b. charity for the poor c. being virtuous
   d. possession of love e. Answer not known
   அனைத்து அறங்களிலும் சிறந்தது எது?
   a. உள்ளத்தில் குற்றம் இல்லாது இருத்தல் b. வறியோர்க்கு ஈதல்
   c. அறத்தோடு நிற்றல் d. அன்புடைமை
   e. விடை தெரியவில்லை

4. Anthanar means ________
   a. Elders b. Ethical people c. Priests
   d. Brahmanas e. Answer not known
   அந்தணர் என்போர் __________
   a. பெரியோர் b. அறவோர் c. அர்ச்சகர்கள்
   d. பிராமணர்கள் e. விடை தெரியவில்லை

 PH: 044 - 24339436, 42867555, 9840226187

5. kunamennum kundraeri nindraar vekuli
kanamaeyum kaaththal aridhu
In this couplet the term Veguli means _____

a. Anger b. Happiness c. Fear
d. Shyness e. Answer not known

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது
இக்குறளில் வெகுளி என்ற சொல்லின் பொருள் யாது?

a. கோபம் b. மகிழ்ச்சி c. அச்சம்
d. நாணம் e. விடை தெரியவில்லை

6. The _______ whose word is never vain,
The _______ shall to the earth proclaim

a. might of men, secret word b. Renounced, denounced
c. both states, greatness d. strength, life
e. Answer not known

__________ மாந்தர் பெருமை நிலத்து
__________ காட்டி விடும்
கோடிட்ட இடங்களை நிரப்புக

a. நிறைமொழி, மறைமொழி b. துறந்தார், இறந்தார் c. இருமை, பெருமை
d. உரன், வரன் e. விடை தெரியவில்லை

7. Match the following

A. Mudharsangam 1. Kabaadapuram
B. Idaichchangam 2. Thenmadurai
C. Kadaichchangam 3. Madurai

| | A | B | C |
|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 |
| b. | 3 | 2 | 1 |
| c. | 2 | 1 | 3 |
| d. | 2 | 3 | 1 |

e. Answer not known

பொருத்துக

A. முதற்சங்கம் 1. கபாடபுரம்
B. இடைச்சங்கம் 2. தென்மதுரை
C. கடைச்சங்கம் 3. மதுரை

| | A | B | C |
|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 |
| b. | 3 | 2 | 1 |
| c. | 2 | 1 | 3 |
| d. | 2 | 3 | 1 |

e. விடை தெரியவில்லை

8. The given number 871378519 is divisible by
a. 9 b. 11 c. 7 d. 13 e. Answer not known
871378519 என்ற எண் கீழே கொடுக்கப்பட்ட எந்த எண்ணால் மட்டும் வகுபடும்
a. 9 b. 11 c. 7 d. 13 e. விடை தெரியவில்லை

9. Insert the missing number
7, 26, 63, 124, 215, 342, __________
a. 481 b. 511 c. 391 d. 421 e. Answer not known
கொடுக்கப்பட்ட தொடரில், விடுபட்ட எண்ணைக் காண்க
7, 26, 63, 124, 215, 342, __________
a. 481 b. 511 c. 391 d. 421 e. Answer not known

10. Find the odd number pair
a. 23:29 b. 19:25 c. 13:17 d. 3:5 e. Answer not known
தொடர்பற்ற எண் இணையைக் கண்டறியவும்
a. 23:29 b. 19:25 c. 13:17 d. 3:5 e. விடை தெரியவில்லை

11. Which of the following states the position of men and states that men's occupation varied according to the land they occupied?
a. Thiraikadal Odiyum Diraviam Thedu b. Vinaye Aadavarkku Uyire
c. Naniyiru Munneer Naavaayotti d. Sirukudipperun Thozhuvar
e. Answer not known
கீழ்க்கண்டவற்றுள் எந்தத் தொடர், ஆண்களின் நிலையையும் அவர்கள் தங்களின் வாழ்விடங்களுக்குரிய தொழில்களைச் செய்தனர் என்பதையும் விளக்குகின்றது?
a. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு b. வினையே ஆடவர்க்கு உயிரே
c. நனியிரு முந்நீர் நாவாயோட்டி d. சிறுகுடிப்பெருந் தொழுவர்
e. விடை தெரியவில்லை

12. The third sangam at Madurai was founded by
a. Ilamperuvazhuthi b. Mudathirumaran
c. Muthukkudumi Peruvazhuthi d. Nedunchezhiyan
e. Answer not known
மூன்றாவது சங்கத்தை மதுரையில் நிறுவியவர்
a. இளம்பெருவழுதி b. முடத்திருமாறன் c. முதுக்குடுமி பெருவழுதி
d. நெடுஞ்செழியன் e. விடை தெரியவில்லை

13. Which of the Ettuthogai anthology contains ample historical incidents?
a. Aagananooru b. Kalithogai c. Natrinai
d. Kurunthogai e. Answer not known
வரலாற்றுச் செய்திகள் மிகுதியாகக் கொண்ட எட்டுத்தொகை நூல் எது?
a. அகநானூறு b. கலித்தொகை c. நற்றிணை
d. குறுந்தொகை e. விடை தெரியவில்லை

14. Which one of the following Ettuthokai anthology consists of more number of songs?
a. Nattrinai b. Kurunthokai c. Kalithokai
d. Ainkurunooru e. Answer not known
பின்வரும் எட்டுத்தொகை நூல்களுள் அதிகமான பாடல்களைக் கொண்ட நூல் எது?
a. நற்றிணை b. குறுந்தொகை c. கலித்தொகை
d. ஐங்குறுநூறு e. விடை தெரியவில்லை

15. Rainfall on red soil takes its colour which is inseparable so as the two who _________with
a. Cultured b. Specific c. Fall in love
d. Respected e. Answer not known
செம்புலப் பெயல் நீர்போல __________ நெஞ்சம் தாம் கலந்தனவே.
a. பண்புடை b. சிறப்புறு c. அன்புடை
d. மதிப்புறு e. விடை தெரியவில்லை

16. Which great work preceding Thirukkural praises the needs of water as "Neerindri Amaiyadhu Ulagu"?
a. Paripaadal b. Nattrinai c. Kuruntogai
d. Tolkaapiyam e. Answer not known
"நீரின்றி அமையாது உலகு" என்று திருக்குறளுக்கு முன்பே கூறிய நூல் எது?
a. பரிபாடல் b. நற்றிணை c. குறுந்தொகை
d. தொல்காப்பியம் e. விடை தெரியவில்லை

17. In which place the poetries of Sangam Literature have been categorized by Sangam poets?
a. Madurai b. Trichy c. Karur
d. Poompuharpattinam e. Answer not known
சங்கப்புலவர்கள் தங்கள் கவிதைகளை எங்கே வகைப்படுத்தினர்?
a. மதுரை b. திருச்சி c. கரூர்
d. பூம்புகார்பட்டினம் e. விடை தெரியவில்லை

18. A man ate 100 grapes in 5 days. Each day, he ate 6 more grapes than those he ate on the earlier day. How many grapes did he eat on the first day.
a. 8 b. 12 c. 76 d. 54 e. Answer not known
ஒருவர் ஒவ்வொரு நாளும் முந்தைய நாள் சாப்பிட்ட திராட்சைகளின் எண்ணிக்கையைவிட 6 திராட்சைகள் கூடுதலாக சாப்பிடுகிறார். 5 நாட்களில் 100 திராட்சைகள் சாப்பிட்டால் முதல் நாள் அவர் சாப்பிட்ட திராட்சைகளின் எண்ணிக்கை என்ன?
a. 8 b. 12 c. 76 d. 54 e. விடை தெரியவில்லை

19. In the NEET exam, out of a total of 180 questions, Jeyanth answered $\frac{19}{30}$ of the questions correctly and $\frac{5}{18}$ of the questions incorrectly. How many questions did Jeyanth not attend at all?

a. 16 b. 24 c. 20 d. 18 e. Answer not known

மருத்துவத்துறையில் சேர்வதற்கு தேசிய அளவில் நடைபெறும் நுழைவுத் தேர்வில் மொத்தம் 180 வினாக்கள் உள்ளன. ஜெயந்த் என்பவர் $\frac{19}{30}$ பங்கு வினாக்களுக்கு சரியாகவும், $\frac{5}{18}$ பங்கு வினாக்களுக்கு தவறாகவும் விடையளியத்தால், அவர் விடையளிக்காத வினாக்களின் எண்ணிக்கை எவ்வளவு?

a. 16 b. 24 c. 20 d. 18 e. விடை தெரியவில்லை

20. Find the wrong number in the given series: 480,480,240,80,20,5

a. 480 b. 80 c. 20 d. 5 e. Answer not known

எண் தொடரில் தவறான எண்ணைக் காண்க: 480,480,240,80,20,5

a. 480 b. 80 c. 20 d. 5 e. விடை தெரியவில்லை

21. Name the book that is also called as "Nedunthogai"

a. Nattrinai b. Agananooru c. Kurunthogai
d. Aingurunooru e. Answer not known

"நெடுந்தொகை" என அழைக்கப்படுவது எது?

a. நற்றிணை b. அகநானூறு c. குறுந்தொகை
d. ஐங்குறுநூறு e. விடை தெரியவில்லை

22. What does the Word 'Sangam' denotes?

a. Assembly of Elders b. Assembly of Artists
c. Assembly of Tamil Poets d. Assembly of Tamil Kings
e. Answer not known

'சங்கம்' என்ற சொல் எதைக் குறிக்கிறது?

a. பெரியவர்களின் அவை b. கலைஞர்களின் அவை
c. தமிழ்க் கவிஞர்கள் அவை d. தமிழ் அரசர்கள் அவை
e. விடை தெரியவில்லை

23. What according to Nattrinai is the prime duty of a householder?

a. not eating meat b. being truthful c. hospitality
d. Gratitude e. Answer not known

இல்லறத்தின் தலையாய கடமையாக நற்றிணை குறிப்பிடுவது எதை?

a. புலால் உண்ணாமை b. வாய்மை c. விருந்தோம்பல்
d. நன்றி மறவாமை e. விடைதெரியவில்லை

24. Who is called as historic poet?

a. Kabilar b. Maamoolanar c. Avvaiyar
d. Tholkappiyar e. Answer not known

'வரலாற்றுப் புலவர்' என்றழைக்கப்படுபவர்?

a. கபிலர் b. மாமூலனார் c. ஔவையார்
d. தொல்காப்பியர் e. விடை தெரியவில்லை

25. Which Sangam literature says "Courtesy is knowing norms and behaving well"?

a. Purananooru b. Kurunthogai c. Kalithogai
d. Paripadal e. Answer not known

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்" என்ற வரி பயின்று வந்துள்ள சங்க இலக்கிய நூல்?

a. புறநானூறு b. குறுந்தொகை c. கலித்தொகை
d. பரிபாடல் e. விடை தெரியவில்லை

26. Tholkappiyam consist of how many sutras?

a. 1630 b. 1620 c. 1610
d. 1650 e. Answer not known

தொல்காப்பியம் எத்தனை நூற்பாக்களை கொண்டது?

a. 1630 b. 1620 c. 1610
d. 1650 e. விடை தெரியவில்லை

27. The aim of PM – VIKAS scheme is ________

a. To connect four crore rural families to the public water system
b. To improve efficiency and access to higher education
c. To build a future ready civil service
d. To provide assistance for traditional artisans and crafts people
e. Answer not known

பிரதமரின் விகாஸ் திட்டத்தின் குறிக்கோள்

a. நான்கு கோடி கிராமப்புற குடும்பங்களை அரசின் குழாய் நீர் அமைப்பில் இணைப்பது
b. உயர் கல்விக்கான செயல்திறன் மற்றும் அணுகலை சீர்படுத்துவது
c. குடிமைப்பணிகளை தொலைநோக்குடன் சீர்திருத்துவது
d. பாரம்பரிய கைவினை கலைஞர்களுக்கு உதவிகளை வழங்குவது
e. விடை தெரியவில்லை

28. If the sum of a number and its square is 182. What is the number?

a. 15 b. 26 c. 28 d. 13 e. Answer not known

ஒரு எண்ணுடன் அதன் வர்க்கத்தைக் கூட்டினால் 182 கிடைக்கிறது எனில் அந்த எண் யாது?

a. 15 b. 26 c. 28 d. 13 e. விடை தெரியவில்லை

29. A number is doubled and 9 is added. If the resultant is tribled, it becomes 75 what is that number ?

a. 3.5 b. 6 c. 8 d. 9 e. Answer not known

ஒரு எண்ணின் இரு மடங்குடன் 9ஐ கூட்டி வரும் விடை மும்மடங்காக மாற்றப்பட்டால் வரும் விடை 75 எனில், அந்த எண் யாது?

a. 3.5 b. 6 c. 8 d. 9 e. விடை தெரியவில்லை

30. Whole numbers W={0, 1, 2, 3, 4, ….} are also called as

a. Positive integers b. Counting numbers c. Non-negative integers
d. Integers e. Answer not known

முழு எண்கள் W={0, 1, 2, 3, 4, ….} என்பன _____ எனவும் அழைக்கப்படும்.

a. மிகை முழுக்கள் b. எண்ணும் எண்கள் c. குறையற்ற முழுக்கள்
d. முழுக்கள் e. விடை தெரியவில்லை

31. Identify the correct statements from the following

1. Vibrant Villages Programme is aimed at comprehensive development of villages along the northern border areas
2. Fund for this programme is shared between the centre and states in the ratio 60 : 40

a. 1 only b. 2 only c. Both 1 and 2
d. Neither 1 nor 2 e. Answer not known

பின்வருவனவற்றுள் சரியான கூற்றுகளைக் கண்டறிக

1. துடிப்பான கிராமங்கள் திட்டமானது வடக்கு எல்லைப் பகுதியில் உள்ள கிராமங்களின் விரிவான வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டுள்ளது
2. இத்திட்டத்திற்கான நிதியுதவி மத்திய மாநில அரசுகளுக்கிடையே 60 : 40 என்ற விகிதத்தில் பிரிக்கப்பட்டுள்ளது

a. 1 மட்டும் b. 2 மட்டும் c. 1 மற்றும் 2
d. இரண்டுமல்ல e. விடை தெரியவில்லை

32. National Rice Research Institute is situated at

a. New Delhi b. Coimbatore c. Cuttack
d. Hyderabad e. Answer not known

தேசிய நெல் ஆராய்ச்சி நிறுவனம் அமைந்துள்ள இடம்

a. புது டெல்லி b. கோயம்புத்தூர் c. கட்டாக்
d. ஹைதராபாத் e. விடை தெரியவில்லை

33. 12th World Hindi Conference is held at

a. Canada b. Fiji c. Philippines
d. Indonesia e. Answer not known

12வது உலக இந்தி மாநாடு நடைபெற்ற இடம் ________

a. கனடா b. பிஜி c. பிலிப்பைன்ஸ்
d. இந்தோனேசியா e. விடை தெரியவில்லை

 PH: 044 - 24339436, 42867555, 9840226187

34. The difference between a two-digit number and the number obtained by interchanging the positions of its digits is 36. What is the difference between the two digits of that number?

a. 3 b. 4 c. 9 d. 5 e. Answer not known

இரண்டு இலக்க எண்ணுக்கும் அதன் இலக்கங்களின் நிலைகளை மாற்றிக் கொள்வதன் மூலம் பெறப்படும் எண்ணுக்கும் உள்ள வித்தியாசம் 36. அந்த எண்ணின் இரண்டு இலக்கங்களுக்கு இடையே உள்ள வித்தியாசம்?

a. 3 b. 4 c. 9 d. 5 e. விடை தெரியவில்லை

35. 10 lakh candidates write the TNPSC Exam this year. If each exam centre is allotted with 1000 candidates. How many exam centres would be needed?

a. 100 b. 1000 c. 10000 d. 100000 e. Answer not known

10 இலட்சம் தேர்வர்கள் இவ்வாண்டு TNPSC தேர்வு எழுதுகின்றனர். ஒவ்வொரு தேர்வு மையத்திலும் 1000 தேர்வர்கள் தேர்வு எழுதினால் எத்தனைத் தேர்வு மையங்கள் தேவை?

a. 100 b. 1000 c. 10000 d. 100000 e. விடை தெரியவில்லை

36. Find the missing number in the following:

4242, 4254, 4230, 4266, 4218, 4278, _______.

a. 4264 b. 4272 c. 4228

d. 4206 e. Answer not known

கொடுக்கப்பட்ட தொடரில், விடுபட்ட எண்ணைக் காண்க

4242, 4254, 4230, 4266, 4218, 4278, _______.

a. 4264 b. 4272 c. 4228

d. 4206 e. விடை தெரியவில்லை

37. Which of the following are correctly matched?

| Conference | Place |
|---|---|
| 1. Business 20 | Imphal |
| 2. Youth 20 | Varanasi |
| 3. Women 20 | Vadodara |

a. 1 only b. 1 and 2 only c. All the above

d. None of these e. Answer not known

பின்வருவனவற்றுள் சரியாக பொருந்தியுள்ளவை எவை?

| மாநாடு | இடம் |
|---|---|
| 1. வணிகம் 20 | இம்பால் |
| 2. இளைஞர்கள் 20 | வாரணாசி |
| 3. பெண்கள் 20 | வதோதரா |

a. 1 மட்டும் b. 1 மற்றும் 2 மட்டும் c. இவை அனைத்தும்

d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

38. The theme of 12th World Security Congress is
a. Railway security strategy : Responses and Vision for future
b. Spreading the message of peace and unity
c. Learn fire safety, increase productivity
d. See yourself in cyber : Together we make it safer
e. Answer not known
12வது உலக பாதுகாப்பு மாநாட்டின் கருப்பொருள்
a. இரயில்வே பாதுகாப்பு உத்தி : பொறுப்புகள் மற்றும் எதிர்காலத்திற்கான பார்வை
b. அமைதி மற்றும் ஒற்றுமையின் செய்தியை பரப்புவோம்
c. தீ பாதுகாப்பைக் கற்போம், உற்பத்தித்திறனைப் பெருக்குவோம்
d. மின்வெளியில் நாம் : ஒருங்கிணைந்து பாதுகாப்போம்
e. விடை தெரியவில்லை

39. International Biotech conclave was held at
a. Bengaluru b. Ahmedabad c. Mumbai
d. Imphal e. Answer not known
சர்வதேச உயிரி தொழில்நுட்ப மாநாடு நடைபெற்ற இடம் ________
a. பெங்களூரு b. அகமதாபாத் c. மும்பை
d. இம்பால் e. விடை தெரியவில்லை

40. Operation Dost refers to
a. Evacuation mission of Indian students from Ukraine
b. Rehabilitation mission of Rohingya muslims in India
c. Deployment of rescue personnel to Turkey and Syria
d. Provide humanitarian assitance to Brazil
e. Answer not known
ஆபரேஷன் தோஸ்த் என்பது
a. உக்ரைனிலிருந்து இந்திய மாணவர்களை மீட்டெடுப்பதற்கான இலக்குத்திட்டம்
b. ரோஹிங்கியா இஸ்லாமியர்களுக்கு இந்தியாவில் மறுவாழ்வு அளிக்கும் திட்டம்
c. துருக்கி மற்றும் சிரியாவிற்கு மீட்பு பணியாளர்களை அனுப்பும் இலக்குத்திட்டம்
d. பிரேசிலிற்கு மனிதநேய உதவிகளை வழங்கியது
e. விடை தெரியவில்லை

41. $P^0$ is equal to
a. 0 b. 1 c. -1 d. P e. Answer not known
$P^0$ க்குச் சமமானது
a. 0 b. 1 c. -1 d. P e. விடை தெரியவில்லை

42. The product of two positive numbers is 2500. If one number is four times the other, then what will be the sum of the two numbers?
a. 25 b.125 c. 225 d. 250 e. Answer not known

இரண்டு நேர்மறை எண்களின் பெருக்கற்பலன் 2500. ஒரு எண் மற்றொன்றின் நான்கு மடங்கு என்றால், இரண்டு எண்களின் கூட்டுத்தொகை என்னவாக இருக்கும்?

a. 25 b.125 c.225 d. 250 e. விடை தெரியவில்லை

43. Find the missing term in the series:

3, 7, 6, 5, 9, 3, 12, 1, 15, ?

a. 18 b. 13 c. -1 d. 3 e. Answer not known

தொடரின் விடுபட்ட எண் காண்க:

3, 7, 6, 5, 9, 3, 12, 1, 15, ?

a. 18 b. 13 c. -1 d. 3 e. விடை தெரியவில்லை

44. India's first indegenous advanced unmanned aerial vehicle is

a. Netra b. Nishant c. Tapas

d. Kaksha e. Answer not known

இந்தியாவின் முதல் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மேம்பட்ட ஆளில்லா வான்வழி வாகனம்

a. நேத்ரா b. நிஷாந்த் c. தபஸ்

d. தக்ஷா e. விடை தெரியவில்லை

45. Match the following

| Exercise | Country |
|---|---|
| A. Tarkash | 1. USA |
| B. Dharma Guardian | 2. Uzbekistan |
| C. Cobra Warrior | 3. UAE |
| D. Dustlik | 4. United Kingdom |
| | 5. Japan |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 5 | 4 | 2 |
| b. | 5 | 1 | 4 | 3 |
| c. | 1 | 3 | 2 | 4 |
| d. | 2 | 1 | 5 | 3 |

e. Answer not known

பொருத்துக

| இராணுவ பயிற்சி | நாடு |
|---|---|
| A. தர்காஷ் | 1. ஐக்கிய அமெரிக்க நாடுகள் |
| B. தர்ம காவலர் | 2. உஸ்பெகிஸ்தான் |
| C. கோப்ரா வாரியர் | 3. ஐக்கிய அரபு அமீரகம் |
| D. டஸ்ட்லிக் | 4. ஐக்கிய பேரரசு |
| | 5. ஜப்பான் |

 PH: 044 - 24339436, 42867555, 9840226187

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 5 | 4 | 2 |
| b. | 5 | 1 | 4 | 3 |
| c. | 1 | 3 | 2 | 4 |
| d. | 2 | 1 | 5 | 3 |

e. விடை தெரியவில்லை

46. The first Indian origin nominee to serve as the President of the World Bank

a. Ajay Banga b. Shantanu Narayan c. Gita Gopinath
d. Raghuram Rajan e. Answer not known

உலக வங்கியின் தலைவராக பரிந்துரைக்கப்பட்டுள்ள முதல் இந்திய வம்சாவளி நபர்

a. அஜய் பங்கா b. சாந்தனு நாராயண் c. கீதா கோபிநாத்
d. ரகுராம் ராஜன் e. விடை தெரியவில்லை

47. Consider the following statements

1. Indian Army gets world's first fully operational SWARM Drone System
2. The Swarm is of 100 drones and can hit targets upto the range of 50 kms

Which of the above statements is/are correct?

a. 1 only b. 2 only c. Both 1 and 2
d. Neither 1 nor 2 e. Answer not known

பின்வரும் கூற்றுகளை ஆய்க

1. உலகின் முதல் முழுமையாக செயல்படும் 'ஸ்வார்ம்' ட்ரோன் அமைப்பை இந்திய இராணுவம் பெற்றுள்ளது
2. இந்த ஸ்வார்ம் 100 ட்ரோன்களைக் கொண்டது. மேலும் 50 கி.மீ தொலைவிற்கு இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டது

சரியான கூற்றுகளை கண்டறிக

a. 1 மட்டும் b. 2 மட்டும் c. 1 மற்றும் 2
d. இரண்டுமல்ல e. விடை தெரியவில்லை

48. Vayulink is an innovative weather monitoring solution developed by

a. DRDO b. Indian Air Force
c. Indian Railways d. Indian Metereological Department
e. Answer not known

வாயுலிங்க் எனப்படும் திறன்மிகு வானிலை ஆய்வு அமைப்பை உருவாக்கிய நிறுவனம்

a. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு
b. இந்திய விமானப்படை
c. இந்திய இரயில்வே
d. இந்திய வானிலை ஆய்வுத்துறை
e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE

49. Who was the recipient of Lifetime achievement honour by India – UK Achievers Honours?

a. Dr. Manmohan Singh  b. Amrit singh  c. P. Chidambaram
d. Sanjay Baru  e. Answer not known

இந்தியா – ஐக்கிய பேரரசு சாதனையாளர் விருதுகள் அமைப்பினால் சமீபத்தில் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றவர் யார்?

a. டாக்டர் மன்மோகன் சிங்  b. அம்ரித் சிங்  c. ப. சிதம்பரம்
d. சஞ்சய் பாரு  e. விடை தெரியவில்லை

50. Consider the following statements

1. James Webb Telescope is an infrared Space Telescope
2. It was jointly developed by five space agencies
3. It orbits the earth in Low Earth Orbit

Which of the above statements is/are correct?

a. 1 only  b. 1 and 3 only  c. all the above
d. None of these  e. answer not known

பின்வரும் கூற்றுகளை ஆய்க

1. ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி ஒரு அகச்சிவப்பு விண்வெளி தொலைநோக்கி ஆகும்
2. இது ஐந்து விண்வெளி மையங்களின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்டது
3. இது தாழ்-புவி சுற்றுப்பாதையில் பூமியைச் சுற்றி வருகிறது

சரியான கூற்றுகளை கண்டறிக

a. 1 மட்டும்  b. 1 மற்றும் 3 மட்டும்
c. மேற்கூறிய அனைத்தும்  d. மேற்கூறிய எதுவுமில்லை
e. விடை தெரியவில்லை

 PH: 044 - 24339436, 42867555, 9840226187

# WEEK TEST 2 OF APRIL, 2023

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| **A** | **D** | **A** | **B** | **A** | **A** | **C** | **B** | **B** | **B** |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| **B** | **B** | **A** | **D** | **C** | **B** | **A** | **A** | **A** | **D** |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| **B** | **C** | **C** | **B** | **C** | **C** | **D** | **D** | **C** | **C** |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| **A** | **C** | **B** | **B** | **B** | **D** | **A** | **A** | **D** | **C** |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| **B** | **B** | **C** | **C** | **A** | **A** | **C** | **B** | **A** | **A** |